# இரட்சிப்பு
RATCHIPPU

RATCHIPPU = SALVATION

Volume-13 | January - 2024 | Issue-08

Price Rs.5-00 | Annual Subscription Rs.60/-




## இயக்குநர் கடிதம்... From Mission Director's Desk




கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே!

அனைவருக்கும் எங்கள் அன்பின் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள். கர்த்தர்தாமே இந்த 2024ம் ஆண்டு முழுவதும் நன்மைகள் மற்றும் கிருபைகளால் பரிபூரணப்படுத்தி நம்மை ஆசீர்வதிப்பாராக. புத்தாண்டுக் கொண்டாட்டத்தின் மகிழ்ச்சி ஆண்டு முழுதும் உங்களில் நிலைத்திருக்க உங்களுக்காய் ஜெபிக்கிறோம். இவ்வாண்டின் முன்பகுதியில் பாராளுமன்ற தேர்தலை சந்திக்கிறது நம் தாய்நாடான இந்தியா. அனைத்து மக்களின் நல்வாழ்வுக்காக பாடுபடும் தலைவர்கள் ஆட்சிக்கு வர ஜெபித்து உழைத்து போராட நம்மை அர்ப்பணிப்போம். இனவெறி, மதவெறி மற்றும் வன்முறைக்கு துணைபோகும் அரசியல் தலைவர்கள் மனந்திரும்ப ஜெபிப்போம். சிறப்பாக, தமிழ்நாட்டின் வடகோடி மற்றும் தென்கோடி மாவட்டங்களில் புயல்-மழை-வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு தங்கள் உடைமைகள் மற்றும் உறவுகளை இழந்து தவிக்கும் மக்களுக்கு ஆறுதல் கிடைக்கவும் அவர்களுடைய தேவைகள் சந்திக்கப்படவும் ஜெபிப்போம்.

'ஜெப-ஜன்னல்' ஜெப-நேரங்கள் (ஜனவரி 12, 19, 26 தேதிகள்), 'அனைவரும்-ஊழியத்தில்' - கைபிரதி ஊழிய திட்டம், இரட்சிப்பு வேதாகம போட்டிகள் ஆகிய நம் ஊழியங்களில் பங்குபெற உங்களை அன்புடன் அழைக்கிறோம். நமது பத்திரிக்கை ஊழியங்கள், காணொலி-செய்தி ஊழியங்கள், வலைதள ஊழியங்கள் (www.ratchippu.com), புத்தக-வெளியீட்டு ஊழியங்கள், கைப்பிரதி ஊழியங்கள், மிஷனரி ஊழியங்கள், திருச்சபை ஊழியங்கள் உள்ளிட்ட நம் இயக்குநரின் அனைத்து ஊழியங்களுக்காக ஜெபித்துக் கொள்ளுங்கள். வேதாகமப் போட்டிக்கான பதில்கள், ஜெப-விண்ணப்பங்கள், அனுபவ சாட்சிகள் மற்றும் காணிக்கைகள் அனுப்புவோர் நமது ஊழிய இயக்குநரின் பெயருக்கு அனுப்பிவையுங்கள் (Online-வங்கி மற்றும் தொடர்பு விபரம்: பக்கம் 12-ல் தரப்பட்டுள்ளது).

தேவகிருபை உங்களோடு இருப்பதாக. ஆமென்.

**கிறிஸ்துவின் பணியில்**
**அருட்திரு. எஸ்.ஜே.டி. தர்மராஜா**

---

**வேத-வரிகள்-157** **யோவேல் - 2:21**

## தமிழ் வேதாகமங்களின் ஒற்றுமைத் திரட்டு

| சத்திய வேதம் (ரேனியஸ்-1840) | பரிசுத்த வேதாகமம் (பவர்-1867) |
|---|---|
| தேசமே! பயப்படாதே; களிகூர்ந்து சந்தோஷப்படு. ஏனெனில், கர்த்தர் பெரிய காரியங்களைச் செய்வார். | தேசமே! பயப்படாதே; மகிழ்ந்து களிகூரு. கர்த்தர் பெரிய காரியங்களைச் செய்வார். |
| **திருவிவிலியம் (பொது-1995)** | **பரிசுத்த பைபிள் (இ.ஆர்.வி-1998)** |
| நிலமே! அஞ்சாதே; மகிழ்ந்து களிகூரு. ஏனெனில், ஆண்டவர் உனக்குப் பெரிய காரியங்களைச் செய்தார். | தேசமே! பயப்படாதே; சந்தோஷமாக இரு. முழுமையாக களிகூரு. கர்த்தர் பெரிய காரியங்களைச் செய்வார். |

வசன தியானம்-147

# பயப்படவேண்டாம்

## நம்பிக்கை பயத்தை வெல்லும்

Joshua-1:9 யோசுவா-1:9

## FEAR NOT! FAITH DEFEATS FEAR

பலங்கொண்டு திடமனதாயிரு; திகையாதே, கலங்காதே, நீ போகும் இடமெல்லாம் உன் தேவனாகிய கர்த்தர் உன்னோடே இருக்கிறார். யோசு–1:9

யோசுவாவுக்கு கிடைத்த தேவ-வாக்கு, ''பலத்துடன் நம்பிக்கை உடையவனாய் இரு, தைரியமாயிரு, பயம் வேண்டாம்; சோர்வு வேண்டாம். நீ எங்கு சென்றாலும் உன் கடவுளாகிய ஆண்டவர் உன்னோடு இருப்பார்.'' (யோசு-1:9) என்பதாகும்.

இவ்வுலகில் வேலையிழப்பு, வியாதி, வயோதிகம் அல்லது அருமையானோரின் மரணம் போன்ற பயங்கரங்கள் நம் முன் உள்ளன. நாளை என்ன நடக்கும் என்பது நமக்குத் தெரியாது.

**பயம் இயல்பானது:** பயம் இயல்பானதுதான். அற்ப காரியங்களுக்கும் பயப்படுவது மனித இயல்பு. சிலர் இருட்டைக் கண்டும், பலர் கரப்பான் அல்லது பல்லிகளைக் கண்டும், இன்னும் பலர் தோல்வி, மரணம், தனிமை போன்ற அரூபமான விஷயங்களை எண்ணியும் பயப்படுகிறார்கள். மனிதர்களாகிய நம் பயம் என்பது நமது வெவ்வேறு சூழ்நிலைகளுக்கேற்ற இயற்கையான மனித பிரதிபலிப்புதான்; ஆனால் பயத்திற்கு நாம் எவ்வாறு பதிலளிக்கிறோம் என்பது முக்கியமானதாகும். தாவீது, ''நான் மரணத்தின் இருளில் நடந்தாலும், பொல்லாப்புக்குப் பயப்படேன்; தேவரீர் என்னுடன் இருக்கிறீர்.'' சங்-23:4 என்று சொல்வதை கருத்தில் கொள்வோம்.

**நமக்கு நல்ல தேர்வுகள் உள்ளன:** பயம் நம்மை சூழும்போது, நாம் பயத்தை கட்டுப்படுத்தி வாழ்வதையோ அல்லது பயப்படும் சூழ்நிலைகள் தவிர்ப்ப தையோ அல்லது பயங்களை துணிவுடன் எதிர்கொள்வதையோ தேர்வு செய்ய லாம். கடவுள் நிச்சயமாக நமக்கு உதவுவார்; மேலும், நா ம் பயத்தில் இருக்கும்போது, ''ஆண்டவர் என்னோடு இருக்கிறார்; நான் பயப்படேன். மனிதன் என்னை என்ன செய்ய முடியும்?'' சங்-118:6 எனச் சொலி கடவுளை சார்வோம்.

**நம்பிக்கை பயத்தை தோற்கடிக்கிறது:** பயத்தை எதிர்த்து போராட உதவும் ஆயுதம் 'நம்பிக்கை' ஆகும். பயம் சிறிதோ, பெரிதோ? ஆனால் எல்லா பயத்தையும் விட கடவுள் மிகவும் பெரியவர். அவர் இந்த பிரபஞ்சத்தை படைத்தவர், அவர் அற்புதங்களைச் செய்ய வல்ல வர் என்பதை நினைவில் கொள்வோம். பயங்களை எதிர்கொள்ள, கடவுள் எப்போதும் நம்முடனிருந்து நமக்கு உதவுவார் எனவே, நம்பிக்கையில் உறுதிப்படுவோம். இந்த நம்பிக்கை நமது எல்லா பயங்களையும் தோற்கடிக்க வல்லது. கடவுள்தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக. ஆமென்.



REV. DHARMARAJA

அருட்திரு. எஸ்.ஜே.டி. தர்மராஜா, ஊழியவு இயக்குநர்
நற்செய்தி வேதாகம அச்சுப்பதி வு ஊழியங்கள், சென்னை–93. தென்னிந்தியா.

புத்தாண்டு சிறப்பு தேவசெய்தி...



அருட்திரு. தர்மராஜா

# 2024 புதுப்பித்தலின் ஆண்டு

தேசமே, பயப்படாதே, மகிழ்ந்து களிகூரு;
கர்த்தர் பெரிய காரியங்களைச் செய்வார்.

யோவேல்–2:21

## 2024 - The Year of Renewal

**Rev. S.J.D. Dharmaraja**
PRESBYTER AND MISSION DIRECTOR
GOOD TIDINGS MINISTRIES, RATCHIPPU HOME, SALIGRAMAM, CHENNAI-93, SOUTH INDIA

கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே! இயேசு கிறிஸ்துவின் இனிய திருப்பெயரிலே அனைவருக்கும் எங்கள் அன்பான புத்தாண்டு (2024) நல்வாழ்த்துக்கள்.

2700 ஆண்டுகளுக்கு முன் இஸ்ரேல் தேசம் சென்ற அதே பாதையில்தான் நம் தேசமும் இன்று சென்றுகொண்டிருக்கிறது. இஸ்ரவேல் மக்களைப் போலவே நாமும் துணிகரமான பாவங்களின் மூலம் நம் வாழ்வில் கடவுள் தந்த ஆசீர் வாதங்களை தூக்கி எறிந்து விட்டு, பின்னர் இழந்துபோன ஆசீர்வாதங்களை மீட்டெடுக்க போராடுகிறோம். ஆகவே, திருச்சபையாக நாம் எழுந்து, நமது சமுதாயத்தை நிறைவாழ்வின் வழியில் நடத்தும் பொறுப்பை ஏற்றுக் கொள்ளும் வகையில் புதுப்பிக்கப்பட வேண்டியது அவசியமாகிறது. கடவுளின் தீர்ப்பின் கீழ் துன்பப்பட்ட நிலம் ஆசீர்வதிக்கப்படும். ‘நிச்சயமாக கர்த்தர் பெரிய காரியங்களைச் செய்வார்.’ புத்தாண்டு விழாவின் ஒரு பகுதியாக யோவேலின் தீர்க்கத் தரிசனத்தை நாம் சிந்திப்போம்.

யோவேல் முதல் அதிகாரம் வெட்டுக்கிளிகள் படையெடுத்து தேவஜனத்தின் ஆசீர்வாதங்களை அழித்துப்போட்டதை விவரிக்கிறது. அதேவிதமாக நம்முடைய விடாப்பிடியான பாவங்கள் நம்மையும் அழிவுப்பாதைக்கு இட்டுச்செல்கின்றன. ‘‘உன் முழு இருதயத்தோடும் என்னிடம் திரும்பு’’ (யோவே-2:12) என்ற கடவுளின் அழைப்பிற்கு செவிசாய்ப்பதே நம் ஒரே நம்பிக்கை. பாவங்களை விட்டு மனம் திரும்புகிறவர்களுக்கு, ‘‘வெட்டுக்கிளிகள் தின்ற ஆண்டை நான் உங்களுக்கு திரும்பக் கொடுப்பேன்’’ (யோவே-2:25) என்ற வாக்குறுதியை கடவுள் அளிக்கிறார்.

இந்த புதிய ஆண்டிலும் உங்கள் வாழ்க்கையில் ‘புதுப்பித்தல்’ தேவையா? யோவேல் 2ம் அதிகாரத்திலுள்ள இஸ்ரேலின் மக்களின் புதுப்பித்தல் செயல்முறையை சிந்தித்து இந்த புதிய ஆண்டை நமதாக்கிக்கொள்வோம்.

2024ம் ஆண்டில் கடவுள் நம்மை எவ்வாறு புதுப்பிப்பார்?

**1. பயம் நீக்குவார்: (யோவேல்-2:21, 22)**

பயம், திகில், அச்சம், பதட்டம், நடுக்கம் போன்ற வார்த்தைகள் திருமறையில் 850 இடங்களுக்குமேல் பயன்படுத்தப்பட்டுள்ளது. பயத்தின் ஆவி கடவுளிடமிருந்து அல்ல, அது பிசாசிடமிருந்து வருகிறது. 'பயப்படாதே' என்ற வார்த்தை மூலம் பயங்களைச் சமாளிக்க கடவுள் நமக்கு உதவுகிறார்.

''ஏனெனில், தேவன் நமக்குப் பயமுறுத்தும் ஆவியைக் கொடுக்காமல், வல்லமையும் அன்பும் தெளிந்த புத்தியுமுள்ள ஆவியைக் கொடுத்திருக்கிறார்'' (2தீமோ-1:7).

யோவேல் சொல்கிறார்: 'பயம் வேண்டாம்' (வச-21), 'வெட்டுக்கிளிகளுடன் அழிவின் மத்தியில் யெகோவா கடவுள் பெரிய காரியங்களைச் செய்கிறார். பூமி பசுமையான ஆடைகளை அணிந்துகொண்டு பூக்கள் மற்றும் கனிகளை கொண்டு வரும்போது பயம் நீங்கி, தைரியமும் மகிழ்ச்சியும் கிடைக்கும்.' (வச-22). அப்போது துக்கத்திற்குப் பதிலாக, மகிழ்ச்சி; கலக்கம் நிறைந்த நாளுக்குப்பதிலாக பெரிதும் பயங்கரமுமான கர்த்தரின் நாள் வரும். அது 'பயப்படாதே' என்று நம்மைத் தேற்றும் நாள். எனவே, நாம் கடவுளை பற்றிக் கொள்ளும்போது அழிவின் ஆண்டுக்கு ஈடாக 'பயங்கள்' இல்லாத புதிய ஆண்டை அவர் நமக்குத் தருவார்.

**2. முன்மாரி - பின்மாரி மழை தருவார்: (யோவேல்-2:23, 24)**

இஸ்ரவேல் நாட்டில் விவசாயம் செய்வதற்கு சரியான நேரத்தில் வரும் முன்மாரி மற்றும் பின்மாரி மழை, கடவுளின் ஆசீர்வாதம் (வச-23). இங்கு குறிப்பிடப் பட்டுள்ள மழை கடவுளுடைய கிருபையையும் ஆசீர்வாதத்தையும் குறிக்கிறது. இவை ஆன்மீக விவசாயத்திற்காக கடவுள் அளிக்கும் பரிசுத்த ஆவியையும் கடவுளின் நற்செய்தி வேலையையும் குறிக்கிறது (மத்-13:24-30; 36-40).

முன்மாரியின் தீர்க்கதரிசனம்: 2000 ஆண்டுகளுக்கு முன்பு பெந்தெகொஸ்தே நாளில், இயேசுவால் நிறைவேற்றப்பட்டது; இயேசுவின் விண்ணேற்றத்திற்குப் பின், 10நாட்கள் எருசலேமில் தொடர் ஜெபத்தில் இருந்த சீடர்கள் மீது இயேசு தூய-ஆவியை ஊற்றினார். பின்னர் தூஆவியின் எழுப்புதல் ஆதித் திருச்சபையில் ஏற்பட்டது; ஒரே வேளையில் 3,000பேர் மனந்திரும்பினர். பின்னர் அதிகம் அதிகமான மக்கள் இரட்சிக்கப்பட்டனர்.

பின்மாரியின் தீர்க்கதரிசனம்: கடைசி காலத்தின் சுவிசேஷ-ஆன்மீக அறுவடை மூலம் நிறைவேற வேண்டும். நமது ஊழியங்கள் வாயிலாக பின்மாரி மழையின் துய-ஆவியானவர் ஊற்றப்பட்டு ஆத்தும அறுவடை சிறப்படைய ஜெபிப்போம்.

இயேசுவின் முதல் வருகையில் பொழிந்த முந்தைய மழையைவிட 'ஏழு மடங்கு வலிமையான பிந்தைய மழையின் வல்லமையை அணிவார்கள்' (ஏசா-30:26) என்ற தீர்க்கனின் வாக்கு நிறைவேற அர்ப்பணித்து நற்செய்தி ஊழியத்தில் உறுதியாய்த் தரித்திருப்போம்.

**3. மறுசீரமைப்பு செய்வார்: (யோவேல் 2:25-26)**

வெட்டுக்கிளி தாக்குதலால் இஸ்ரேலின் பயிர்கள் அழிந்தன (யோவேல்-1:4), அதன் தாக்கம் ஒரு வருடத்திற்கும் மேலாக நீடித்தது. வெட்டுக்கிளிகள் பயிரை அழித்தபோது, நடப்பு ஆண்டின் அறுவடை மற்றும் அடுத்த ஆண்டுக்கான விதைகளை அழித்துப்போட்டன. எனவே, பயிர் வளர்ச்சியை மீட்டெடுக்க பல ஆண்டுகள் ஆகும் (யோவேல்-1:12).

ஆனால், யோவேல்-2:25ன்படி அதிசயம் நடக்கும், ''போரடிக்கும் களங்கள் தானியங்களால் நிறைந்திருக்கும்; தொட்டி களில் திராட்சரசமும் எண்ணெயும் நிரம்பி வழியும்.'' என வாக்களித்தார் தேவன்.

இந்த மறுசீரமைப்பு உடல் ரீதியாகவும் ஆன்மீக ரீதியாகவும் இருக்கும். உடல் ரீதியாக, ''நீங்கள் நிறைய சாப்பிட்டு திருப்தி அடைவீர்கள்.'' ஆன்மீக ரீதியில், ''உங்களை அதிசயமாய் நடத்திய தேவனை துதிப்பீர்கள்' (யோவேல்-2:26).

இந்த புதிய ஆண்டில்கூட ஆண்டவர் நம் வாழ்வையும் மறுசீரமைத்து இழந்து போன நம் மகிழ்சியையும் ஆசீர்வாதத்தையும் மீட்டுத்தர உண்மையுள்ளவராய் இருக்கிறார் என்பதை விசுவாசித்து காத்திருப்போம்.

**4. அவமானம் போக்குவார்: (யோவேல்-2:26-27)**

யோவேல் தீர்க்கதரிசி இறைமக்களின் எதிர்காலம் பற்றி பேசுகிறார். தேவஜனம் அவமானம் அடையாத, ஆன்மீக ஜனமாக இருக்கும் (வச-26). ஆபிரகாம், ஈசாக்கு மற்றும் யாக்கோபின் தேவனாகிய கடவுள், கிறிஸ்துவின் திருச்சபை மக்கள் எவ்வகையிலும் அவமானமடைய விடமாட்டார்' (வச-27) என்கிறார்.

கடவுளின் மக்களுக்கு எந்த அவமானமும் இல்லை என்ற வாக்குறுதி இந்த பகுதியில் இரண்டு முறை வருகிறது, இது கடவுளின் தீவிரத்தை தம் மக்களுக்கு உறுதிப்படுத்துகிறது. கடவுளின் பிள்ளைகளாகிய நாம் இதை இலகுவாக எடுத்துக் கொள்ள முடியாது, ஆனால் இந்த உறுதியை ஏற்றுக்கொண்டு, கடவுள் நம்மைப் புதுப்பிக்க அனுமதிப்போம்.

இந்த புதிய ஆண்டு 2024, நிச்சயமாக நம் வாழ்வில் நாம் இழந்த சந்தோஷம், சமாதானம், ஆசீர்வாதங்கள், நன்மைகள் மற்றும் கிருபைகளில் புதுப்பித்தலைக் கொண்டுவரும் என்பதை விசுவாசித்து காத்திருப்போம்.


கடவுள்தாமே நமது பயங்களை நீக்கி, முன்மாரி-பின்மாரி ஆகிய உலக-பரலோக ஆசீர்வாதங்கள் தந்து, இழந்த நம் ஆசீர்வாதங்களை மறுசீரமைத்து, இந்த 2024ம் ஆண்டில் நமக்கு பெரிய காரியங்களை செய்ய சித்தமுள்ளவராய் இருக்கிறார். எனவே, பயம் நீங்கி மிகிழ்ந்திருப்போம். கர்த்தர்தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக. ஆமென்.

கிறிஸ்துவின் பணியில் உங்களுடன்
**அருட்திரு. எஸ்.ஜே.டி. தர்மராஜா**

---

அருட்திரு.எஸ்.ஜே.டி. தர்மராஜா, ஆயர் மற்றும் இயக்குநர், நறிசெய்தி ஊழியங்கள், இரட்சிப்பு இல்லம், சாலிகிராமம், சென்னை-93. தென்னிந்தியா.

வேத ஆராய்ச்சி - 80



Rev. Dr. சுரேஷ் ராஜன்

# சங்கீதங்கள் கற்றுத்தரும் விலையேறப்பெற்ற சத்தியங்கள்

Author: Rev.Dr. D. Suresh Rajan

## சங்கீதம் – 80

EPISODE-80

**ஆதார-வசனம்:-** ‘இறைவனே! எங்களை முன்னிருந்த நிலைக்குத் திரும்பக் கொண்டுவாரும்; உம் முகத்தை எங்கள்மேல் பிரகாசிக்கச் செய்யும். அப்பொழுது இரட்சிக்கப்படுவோம். வச-3,7,19 (இ.ச.கா.மொழிபெயர்ப்பு).

**முன்னுரை:-** அன்பான ‘இரட்சிப்பு’ வாசகர்கள் அனைவருக்கும் எனது உள்ளங் கனிந்த புத்தாண்டு நல்வாழ்த்துக்கள். ஆண்டவர்தாமே இந்த புதிய ஆண்டை ஆசீர்வதித்துத் தருவாராக. தேவகிருபை நம் அனைவரோடும் நிறைவாய் தங்கியிருப்பதாக.

இச்சங்கீதம், ஆசாபின் வழித்தோன்றல்களில் ஒருவராலோ அல்லது பின்நாட்களில் வாழ்ந்த ஆசாப் என்ற பாடகராலோ எழுதப்பட்டிருக்கலாம் எனக் கருதப்படுகிறது. சாலோமோனின் குமாரனாகிய ரெகொபெயாமின் காலத்தில் இஸ்ரவேல் தேசம் வடநாடு தென்னாடு என 2ஆக பிரிந்தது. வடக்கு ராஜ்யம் ‘இஸ்ரயேல்’ என அறியப்பட்டது. தேவஜனத்தின் 10கோத்திரத்தினர் இங்கு வாழ்ந்தனர். தெற்கு ராஜ்யம் ‘யூதா’ என அறியப்பட்டது; யூதா மற்றும் பென்னியமீன் கோத்திரத்தினர் இங்கு வாழ்ந்தார்கள். ‘வடநாடு’ அசீரியர்களால் துன்புறுத்தப்பட்ட நாட்களில் கடவுளின் உதவிவேண்டி எழுதப்பட்ட சங்கீதமாக இது கருதப்படுகிறது.

### 1. விடுவிக்கும் இறைவன்:- (வசனங்கள் 3, 7, 19)

‘தேவனே! எங்களை திரும்பக் கொண்டுவாரும்’ அதாவது ‘restore us again’ என்ற வாசகம் 3, 7, 19 ஆகிய வசனங்களில் திரும்பத்திரும்ப வருகிறது (Refrain). கடந்த காலங்களில் உதவிசெய்த ஆண்டவர் மறுபடியும் உதவிசெய்ய வல்லவர் என்ற பொருளில் இது சொல்லப்பட்டுள்ளது. ‘அசீரியரின் பிடியில் சிக்கியிருக்கும் உமது ஜனத்தை நீர் திரும்ப விடுவியும். அந்நிய மார்க்கங்களில் சென்றுவிட்ட நாங்கள் திரும்பவும் உமிடம் சேர உதவிசெய்யும். உம் முகத்தை எங்கள்மேல் பிரகாசிக்கச்செய்யும்’ என இறைமக்கள் கதறுவதை இப்பாடலில் காணமுடிகிறது.

அன்பர்களே! கடந்த ஆண்டுகளில் தேவனைவிட்டு விலகி அதி-தூரம் சென்று விட்டீர்களா? சாத்தானின் சதி உங்கள் குடும்பவாழ்வை அலைக்கழிக்கிறதா? பாவப்பாரத்தால் நெருக்கப்பட்டு, பிசாசின் பிடியிலிருக்கும் நீங்கள், தேவனை நோக்கி, ‘உமது பாதத்தில் சேர, உமது பிள்ளையாய் வாழ, உமது அநுக்கிர கத்தைத் தந்தருளும்’ என இறைவனை நோக்கி வேண்டுதல் செய்யுங்கள். இறைவனது ஒளி உங்கள் வாழ்வை இப்புதுவருடத்தில் வெளிச்சமாக்குவதாக.

**2. வழிநடத்தும் இறைவன்:- (வசனங்கள் 1, 2)**

இப்பகுதி, ‘‘இஸ்ரவேலின் மேய்ப்பரே!’’ ‘‘யோசேப்பை ஒரு மந்தையைப்போல் நடத்திச்செல்பவரே’’ என இறைவனை வருணிக்கிறது. இறைவன் தன் மக்களுக்கு ஒரு நல்லாயனாக இருந்து வழிநடத்துவது இங்கு குறிப்பிடப்பட்டுள்ளது. 80ம் மற்றும் 23ம் சங்கீதங்களில் மாத்திரமே இறைவன் ஒரு ஆயனாக சித்தரிக்கப் படுகிறார். இஸ்ரவேல், யோசேப்பு என்று குறப்பிடப்படுவது, அனைத்து இறைமக்க ளுக்கும் அவர் ஆயனாக இருப்பதை குறிப்பதாய் அமைந்துள்ளது.

அன்பர்களே! புதிய வருடத்துக்குள் பிரவேசித்திருக்கும் உங்கள் வாழ்வின் சில பகுதிகள் இருளடைந்து இருக்கலாம். ஆனால், இறை-ஒளி உங்கள்மீது வீச விரும்புவீர்களானால், இறைவன் உங்கள் ஆயராக-தலைவராக இருக்க வேண்டும். உலக மாயைகள் நம் மனதை மயக்கி, கேட்டுக்குப்போகும் பாதைகளில் நடக்க நம்மை தூண்டும்பொழுது வேதத்தின் வழியில் வாழ உங்களை அர்ப்பணியுங்கள். நாம், இயேசுவின் இரத்தத்தினால் பாவமன்னிப்பின் நிச்சயத்தை பெற்று, பிசாசின் கிரியைகள் அழிக்கப்படும்படி கடவுளின் பாதத்தை அடையவேண்டும்.

**3. விண்ணப்பம் கேட்கும் இறைவன்:- (வசனங்கள் 4-6)**

சங்கீதம்-65:2 எரேமியா-29:12,13 1பேதுரு-3:12 ஆகிய வசனங்களின்படி இறைவன் நம் ஜெபம்கேட்டு பதிலளிப்பவர் என்பது உண்மை எனவும்; ஆனால், ஜனங்களின் ஜெபம்கேட்டு இறைவன் கோபமாய் உள்ளதாகவும், மகிழ்ச்சிக்குப் பதில் கண்ணீரை தனக்கு உணவாக கொடுத்ததாகவும், பிறரின் நகைப்பிற்கும் கேலிக்கும் உரிய வராய் தான் இருப்பதாகவும் ஆசாப், இங்கு அங்கலாய்க்கிறார்.

தேவன் நம் ஜெபங்களை ஏற்றுக்கொள்ளாதபடி நம் பாவங்கள் தடைசெய்வதை வேதத்தில் காண்கிறோம். நீதி-15:29ல், ‘‘துன்மார்க்கருக்கு கர்த்தர் தூரமாய் இருக்கிறார், நீதிமான்களின் ஜெபத்தை அவர் கேட்கிறார்.’’ என்றும், யோவோ-9:31ல், ‘‘பாவிகளுக்கு தேவன் செவிகொடுப்பதில்லை; ஒருவன் தேவபக்தி உள்ளவ னாய், தேவசித்தம் செய்தால் அவனுக்கு செவிகொடுப்பார்.’’ என்றும் காண்கிறோம்.

அன்பர்களே! நமது ஜெபங்களை தேவன் கேட்காதபடிக்கு நம் பாவங்கள் நமக்கு சாபத்தைக் கொண்டுவரும் என உணரும் பட்சத்தில், இவ்வருட ஆரம்பத்திலேயே அவைகளை இறைவனின் சமூகத்தில் அறிக்கையிட்டு, சீர்பொருந்துவோம்.

**4. உயிர்ப்பிக்கும் ஆண்டவர்:- (வசனங்கள் 8-18)**

உபா-32:32,33 ஏசா-5:1 எரே-2:21 எசே-17:56 ஓசி-10:1 மத்-21:33 மாற்-12:1 ஆகிய பகுதிகளில் இஸ்ரவேல் திராட்சை-கொடிக்கு உருவகமாகக்கப்பட்டுள்ளது. இங்கு வச-15ல், இஸ்ரவேல் என்ற திராட்சக்கொடி பல்விதத்தில் அழிக்கப்படுவதால், ‘தேவனே! உமது வலதுகரம் நாட்டின கொடியையும், உமக்கு நீர் திடப்படுத்தின கிளையையும் கடாட்சித்தருளும்’ என்ற வேண்டுகோளை ஆசாப் வைக்கிறார்.

அன்பர்களே! நம் வாழ்விலும் நாம் சூழ்நிலைகளால் சூரையாடப்பட்டவர்களாகவும், வாழும் வழியறியாதவர்களாகவும் இருக்கிறோம் அல்லவா? கவலை வேண்டாம். தேவன் தமது வலதுபாரிசத்துப் புருஷனாக, தாம் திடப்படுத்தின மனுஷகுமாரனாக (வச-17) இயேசு கிறிஸ்துவை நமக்கு அருளியுள்ளார். அவர் நம்மை உயிர்ப்பிப்பார். நம்பிக்கையோடு அவரை பற்றிக்கொள்வோம்.

**முடிவுரை:-**

அன்பர்களே! இந்த புதுவருடத்தில் தேவனுடைய பராமரிப்பும் பாதுகாப்பும் உங்களோட இருப்பதாக. தேவன்தாமே உங்களை உயிர்ப்பித்து தமது முகத்தின் ஒளியை உங்கள்மீது வீசச்செய்வாராக. உங்கள் பழைய பாவவழிகளை அறிக்கையிட்டு அவர் கொடுக்கும் விடுதலை வாழ்வை விசுவாசத்தால் ஏற்றுக்கொள்வீர்களாக. தேவனைவிட்டு பின்வாங்காமல், அவருக்கு சாட்சியாய் வாழ கர்த்தர்தாமே அருள் செய்வாராக. ஆமென்.

ஆசிரியர்: அருட்திரு. அறிவர். டி. சுரேஷ் ராஜன், இணை நிறுவனர், வேதாகம மொழிபெயர்ப்பு முயற்சிகள், கோயம்புத்தூர். தென்னிந்தியா.

## PRAYER-WINDOW PRAYER-WINDOW

## ஜெப-ஜன்னல் ஜெப-ஜன்னல்

### ஜெப-ஜன்னல் ஜெப நேரங்கள் ஜனவரி - 2024

| | |
|---|---|
| **ஜெப-ஜன்னல்-1 காலை-ஜெபம்** | நாள்: 121-01-2024 இரண்டாம் வெள்ளி<br>நேரம்: காலை 5-முதல் 6-மணி வரை. |
| **ஜெப-ஜன்னல்-2 மதிய-ஜெபம்** | நாள்: 19-01-2024 மூன்றாம் வெள்ளி<br>நேரம்: மதியம் 1-முதல் 2-மணி வரை. |
| **ஜெப-ஜன்னல்-3 இரவு-ஜெபம்** | நாள்: 26-01-2024 நான்காம் வெள்ளி<br>நேரம்: இரவு 8-முதல் 10-மணி வரை. |

பிரியமானவர்களே! இந்த ஜெப-ஜன்னல் ஜெப-நேரங்களில் தானி-6:10 வசனத்தின்படி **''தானியேல், மேலறையில் எருசலேம் தேவாலயத்திற்கு நேராய் பலகணிகள் திறந்திருக்க''** ஜெபித்ததைப்போல் நமது இயக்குநரும், ஜெப-ஜன்னல் ஜெப-வீரர்களும் ஆலயம் நோக்கி ஜெபிக்கவிருக்கிறார்கள். நீங்களும் இந்த நேரங்களில் உங்கள் ஆலயம் நோக்கி ஜெபிக்கும்படியாக அன்புடன் வேண்டிக்கொள்கிறோம்.

**CONTACT DETAILS OF OUR MINISTRIES:**

**MOBILE:** 9962924900/7871676100
**WHATSAPP:** 9789914463/7871676100
**E-MAIL:** sjddharmaraja@gmail.com
**POSTAL ADDRESS:** REV. S.J.D. DHARMARAJA, MISSION DIRECTOR, NO: 4/2-A, BARATHI ST., GANDHI NAGAR, SALIGRAMAM, CHENNAI - 93
**WEBSITE:** www.ratchippu.com

**BANK DETAILS FOR SENDING OFFERTORY:**

NAME: DHARMARAJA SJD.
S.B. ACCOUNT NO: 601071548.
BANK AND BR.: INDIAN BANK, NESAPAKKAM
IFSC CODE: IDIB000N122.
BANK ADDRESS: NESAPAKKAM, CHENNAI-78.
GOOGLE PAY (G-PAY) NAME AND NO.: REV. DHARMARAJA SJD: 9789914463

**வேதாகம போட்டிக்கான பதில்களை அனுப்பவேண்டிய முகவரி**

திருமதி. ஜெயசீலி தர்மராஜா, எஃப்–1, முதல் மாடி, பாரதி பிளாட்ஸ், எண்: 4/2-A, பாரதி தெரு, காந்தி நகர், சாலிகிராமம், சென்னை–93. வாட்ஸ்–அப்: 9789914463

**ADDRESS FOR SENDING ANSWERS OF BIBLE CONTEST**

Mrs. Jeyaseeli Dharmaraja, F-1, First floor, Bharathi flats, No: 4/2-A, Bharathi Street, Gandhinagar, Saligramam, Chennai-93. E-mail: ratchippu@hotmail.com/ sjddharmaraja@gmail.com. Whatsapp: 9789914463

# வேதாகம போட்டி–158 சரியான பதிலளித்தோர்

1) அமலியா லோகநாதன் TVM
2) அமிர்தகனி பொன்ராஜ் CHE
3) அன்பு சுதந்திரம் TIN
3) ஏஞ்சல் சி. TIN
4) ஏஞ்சல் ராஜதுரை CHE
5) ஏஞ்சலின் பிரியா ஏ. TIN
6) ஏஞ்சலின் ரூஸ்வெல்ட் CHE
7) ஏஞ்சலின் வில்லியம்ஸ் CHE
8) அன்னாள் ஜெபக்கனி CBE
9) அனி பாய் ஜாண் TIN
10) அனிதா மோகன்ராஜ் ERO
11) அரோமா சாத்ராக் TIN
12) ஆர்தர் மாசில்லாமணி CHE
13) அருள்செல்வி VIR
14) அருள்செல்வி ஜாண்ஸன் TIN
15) பாமா மாதவன் KAL-AP
16) பெல்சி தங்கராஜ் CHE
17) பெனிட்டா பிராங்க்ளின் CHE
18) பியூலா ஜேசுராஜன் PON
19) செலினா பென்சி வில்சன் DR, KUW
20) சந்திராபாய் மாசிலாமணி AVD
21) சந்திரலேகா KAL-AP
22) சந்திரா சாமுவேல் TIN
23) சார்லஸ் ஃபின்னி DR CHE
24) சார்லஸ் சாலோமோன் WG-CMR SHI
25) சார்லட் டேவிட் CHE
26) கிறிஸ்டல் ஜாய் யோபு CKA-TPT
27) கிறிஸ்துதாஸ் GOP
28) கிறிஸ்டி ஆயீட்டஸ் MAR
29) கிறிஸ்டி ஞானராஜ் CHE
30) கிறிஸ்டி மெர்சி ராஜ்குமார் TUT
31) சிசிலி புஷ்பம் டேவிட் CHE
32) டெய்ஸி ஜெபதாஸ் TCY
33) டெய்ஸி சாம் KAL-AP
34) டேனியல் தாமஸ் TIN
35) டேனிங் சொர்ணா ஜெஸ் TIN
36) டேவிட் ஜே.ஆர். CHE/CBE
37) தெபோராள் ஆனந்தமணி TUT
38) டெல்வின் இம்மானுவேல் CBE
39) தேவமணி ஆபிரகாம் TUT
40) தேவநேசம் ராஜாசிங் CHE
41) டோராபாய் CHE
42) எமிமாள் மில்டன் CHE
43) எமிமாள் சாமுவேல் (ஜெஸிக்கா) MDU
44) எஸ்தர் D.R. TIN
45) எவாஞ்சலின் ஜோன்ஸ் DR. SLM
46) குளோரி ரவீந்திரன் TIN
47) ஞானம் ஜெபராஜ் TIN
48) ஞானம் பிலிப் CHE
49) ஞானராணி G. TVL
50) ஞானசுந்தரி நாகராஜன் TIN
51) கோல்டா ஜேசுபாதம் MUM
52) கிரேஸ் பொன்மணி ரெக்ஸ் CHE
53) கிரேஸ் பிரின்ஸ் APM-TEN
54) கிரேஸ்லின் சாந்தி TIN
55) கிரேனா அன்புரோஸ் CHE
56) கிரேஸியா ஜெயபால் CHE
57) கிரிசெல்டா செய்லர் CHE
58) ஹெலன் ஜான்சிராணி TIN
59) ஹெலென் ஜெனிபர் பாண்டியன் CHE
60) ஹெலன் திலக் TUT
61) ஹேமா அஜீத் CHE
62) ஹேமா கேப்ரியேல் BAN
63) ஹெப்சிபா மங்களராஜ் TIN
64) ஹிம்லா ராஜகுமாரி CHE
65) இளவரசி ஜோபிதா CBE
66) இந்திரா கெத்ஸி டேவிட் TIN
66) இன்பவல்லி கலைச்செல்வன் MDU
67) ஜமீலா செல்வராஜ் CHE
68) ஜேன் தர்மராஜ் MAR
68) ஜேன்ஸ் (ஜான்ஸி) ANI
69) ஜான்ஸி சந்தியா MKM
70) ஜாஸ்மின் ஞானதாஸ் CHE
71) ஜெபா ஜெயராஜ் AVD

72) ஜெபக்குட்டி மோசஸ் TIN
73) ஜெபரஞ்சிதம் மெர்லின் TUT
74) ஜெபசீலி கிளின்டன் CHE
75) ஜெபா சீனி MAR TIN
76) ஜெபஸ்டின் G. TIN
77) ஜீவா டேவிட் சாலோமோன் APM-TEN
78) ஜெமி ஜாய் பிளஸ்ஸி TIN
79) ஜெமீலா நிக்ஸன் CHE
80) ஜெனிலா CHE
81) ஜென்ஸி ஞானேஷ் MUM-MS
82) ஜெனித்தா செல்வின் TIN
83) ஜெனிட்டா ஷெருபா ஞானவேல் DHA
84) ஜெரின் ஸ்டீபன் MUM
85) ஜெஸி செல்லதுரை CBE
86) ஜெஸி ஜெயக்குமார் TIN
87) ஜெயா ஆல்பர்ட் KUM
88) ஜோனா ஸ்டீபன் AVD
89) ஜாய்ஸ் பாண்டியன் CHE
90) ஜுலியட் ஜெபா CHE
91) ஜுலியட் ஜெயக்குமார் TIN
92) கலா கிருபாகரன் TIN
93) கலையரசி செல்வராஜ் CHE
94) கஸ்தூரி எலியாஸ் TIN
95) கோயில்பிள்ளை ஞானத்தாய் APM
96) லதா மைக்கேல்ராஜ் CHE
97) லீலா டேவிட் CHE
98) லீலா ஜோஸப் CBE
99) லில்லி ஜாண்ஸன் CHE
100) லிஸி டென்சிங் TIN
101) மல்லிகா ஜாய்ஸ் (ஜஸ்டினா) JAY
102) மல்லிகா V. CHE
103) மணிமேகலை ஜெயக்குமார் TIN
104) மரிய பாப்பா CHE
105) மரியாள் ஜே.எஸ். TUT
106) மெஜிலா ஜோஷ்வா TUT
107) மெர்சி ஃபுளோரா பாஸ்கர் VEL
108) மெரிட்டா ஜெயபாலன் TCY
109) மியூரியல் புஷ்பராஜ் CHE
110) நிக்ஸன் எவர்பிரைட் TIN
111) ஆலிவ் ஜெயபாலன் CBE
112) பாக்யபாய் ஆரோன் TIN
113) பமீலா எட்வின் NAG
114) பால் தங்கம் CHE
115) பிங்க்லின் சந்தோஷ் CHE
116) பிரேமா பூபாலன் AVD
117) பிரேமா ஸ்டாலின் CHE
118) பிரின்ஸ் தயாநிதி CHE
119) பிரின்ஸ்லின் ஷைனி APM-TEN
120) பிரிசில்லா தாஸ் CHE
121) பிரிஸ்கில்லாள் சசி CBE
122) ரேச்சல் கனகராஜ் CBE
123) ராஜகுமாரி சன்னியாசிமுத்து TUT
124) ராஜபிரமீளா TPT
125) ராஜ்மேரி சார்லஸ் KER
126) ரமோலா அதிசயராஜ் TIN
127) ராணி ஃபுளோரா APM-TEN
128) ராணி பிரபாகர் TIN
129) ராணி சாமுவேல்ராஜ் CHE
130) ரத்னாவதி பாண்டியன் CHE
131) ரெஜினா விக்டர் TIN
132) ரோஸ்லின் மார்கிரெட் CHE
133) ரோஸி ஸ்டீபன் CHE
134) ரூபவதி நோபிள் TIN
135) ரூத் HAPP-TCY
136) ரூத் ஜாண்ஸன் TIN
137) சலோமி மனோகர் DR. CHE
138) சம்பு ஜெயச்சந்திரன் MDU
139) சரோஜா செல்வராஜ் CHE
140) சரோஜினி எலிசபெத் CHE
141) செல்வ அமுதா ஜார்ஜ் CHE
142) செல்வ பென்ஸி ஆபேல் KOT-AP
143) செல்வராஜ் K. CBE
144) செல்வராணி ஆல்பர்ட் CHE
145) செல்வி அமிர்தராஜ் TVR
146) ஷாலி எடிசன் CHE
147) சாந்தி ஆல்பர்ட் PCT
148) சாந்தி ஆசேர் TIN
149) சாந்தி ஜெயசீலன் CHE

## வேதாகம போட்டி–158 சரியான பதில் அளித்தோர் பட்டியல்

....11ம் பக்கத் தொடர்ச்சி

150) சாந்தி ரோஸ் CBE
151) ஷர்மிளா செல்வராஜ் DR. CUD
152) ஷேபா சந்தோஷ் CHE
153) ஷீபா சாம்ஸன் CHE
154) ஷீலா G. PNR-TVL
155) ஷீலா இஸ்ரேல் TCY
156) ஷெரீன் ஜெபராஜ் PAN
157) சவுந்தரம் சாலமோன் CHE
158) ஸ்டெல்லா டேவிட் TUT
159) ஸ்டெல்லா கனகராஜ் CHE
160) சுகிர்தா ஆல்வின் CHE
161) சுகிர்தா சின்னதுரை TIN
162) சுஜாதா சாமுவேல் CHE
163) சுமித்ரா B. CHE
164) சுந்தரிபாய் TUT
165) சுசீலா தியோடர் TCY
166) சுவர்ணலதா அற்புதராஜ் CHE
167) தனசீலி ஞானராஜ் CHE
168) தாரா மாணிக்கம் CHE
169) தெல்மா ஸ்டேன்லி MDU
170) உமா குளோரி CHE
171) வனஜா ஹெர்பர்ட் TIN
172) வசந்தா அன்பன் TIN
173) வசந்தா சந்திரசேகர் CBE
177) வசந்தி கருணாகரன் CHE
178) வசந்தி வாசன் CHE
179) விஜயராணி A. CHE
180) விஜி டேனியல் CHE
181) விண்ணரசி ரோஸ் CHE
182) வினோலியா ஜேம்ஸ் TUT
183) வினோலியா வில்சன் VAN
184) வைலட் கிறிஸ்டோபர் TIN
185) வைலட் சைரஸ் CHE

## வேதாகமப் போட்டி-157
## சரியான பதிலளித்தோர்

1) ஏஞ்சலின் ரூஸ்வெல்ட் CHE
2) கிறிஸ்டி ஆயீட்டஸ் MAR
3) ஜென்ஸி ஞானேஷ் MUM-MS
4) நதியா லாரன்ஸ் TVR
5) ஜெபா ஜெயராஜ் AVD
6) கிரேனா அன்புரோஸ் CHE
7) ரூபி ஜாண் நாடார் MUM
8) செல்வ அமுதா ஜார்ஜ் CHE

## வேதாகம போட்டி–158 (லூக்கா)
## சரியான விடைகள்

1. யோவானை குறித்து லூக்:-3:15
2. ஞானம் லூக்:-7:35
3. மரியாள் லூக்:-10:39
4. ஆயக்காரன் லூக்:-18:13
5. அகுஸ்து ராயன் லூக்:-2:1
6. இயேசு - சகேயுவிடம் லூக்:-19:9
7. பன்னிரண்ட வயது லூக்:-8:41
8. யோசேப்பு லூக்:-23:50
9. சரி - லூக்:-5:38
10. சரி - லூக்:-11:34
11. தவறு - லூக்:-1:37
12. தவறு - லூக்:-4:24
13. ஈ - சீஷன் லூக்:-6:40
14. ஈ - மரியாள் லூக்:-10:42
15. ஆ - வஸ்திரத்தை லூக்:-22:36
16. ஈ - மனுஷகுமாரன் லூக்:-19:10
17. ஆசாரியன்-லேவியன்-சமாரியன்:-10:31-33
18. அன்னாள் லூக்:-2:36-38
19. காட்டத்தி மரம் லூக்:-19:1-5
20. காலம்-நியாயம் லூக்:-12:54-57

# வேதாகம போட்டி-159

வேதவசன இருப்பிடத்துடன் பதிலளிக்கவேண்டும். கடைசி நாள்: 25-01-2024

வேத–பகுதி: யோவான் சுவிசேஷம் முழுவதும்

1. ஆற்றுக்கு அப்புறம் ஒரு தோட்டம் இருந்தது; அந்த ஆற்றின் பெயர் என்ன?

2. இயேசுவின் சீடனாகிய நாத்தான்வேலின் சொந்த ஊர் எது?

3. ‘‘மேசியாவைக் கண்டோம்’’ என சீமோன் பேதுருவிடம் சொன்னது யார்?

4. ‘‘என் ஆண்டவரே! என்தேவனே!’’ - யார்? யாரிடம் சொன்னது?

5. இயேசுவின் கல்லறையினருகே வெளியே நின்று அழுதுகொண்டிருந்தது யார்?

6. ‘‘போதகர் வந்திருக்கிறார், உன்னை அழைக்கிறார்’’ - யார்? யாரிடம் சொன்னது?

7. ‘யாக்கோபுடைய கிணறு’ எந்த ஊரில் இருந்தது?

8. எபிரேயு பாஷையில் ‘கொல்கொதா’ என்று சொல்லப்படும் இடம் எந்த இடம்?

9. ‘ஆவியே உயிர்ப்பிக்கிறது மாம்சமானது ஒன்றுக்கும் உதவாது’ - **சரியா, தவறா**?

10. ‘தேவனை ஒருவனும் ஒருக்காலும் கண்டதில்லை’ - **சரியா தவறா**?

11. ‘பொல்லாங்கு செய்கிற எவனும் ஒளியை மறைக்கிறான்’ - **சரியா தவறா**?

12. ‘விதைக்கிறவன் ஒருவன் அறுக்கிறவன் ஒருவன்’ -**சரியா தவறா**?

13. தோற்றத்தின்படி தீர்ப்பு செய்யாமல் ‘**இதன்**’ படி தீர்ப்பு செய்யவேண்டும்:
அ) இரக்கத்தின் ஆ) சட்டத்தின் இ) நெறியின் ஈ) நீதியின்

14. ‘**இவன்**’ கூலிக்காக வேலைசெய்கிறவன் ஆகையால் ஓடிப்போகிறான்:
அ) அடியாள் ஆ) சித்தாள் இ) பணியாள் ஈ) கூலியாள்

15. ‘**இவன்**’ பிரதான ஆசாரியனாகிய காய்பாவுக்கு மாமன்:
அ) பிலாத்து ஆ) ஏரோது இ) அன்னா ஈ) பரபாஸ்

16. மரித்தோர் ‘**இவருடைய**’ சத்தத்தை கேட்கும் காலம் வரும்:
அ) தேவகுமாரன் ஆ) சத்தியபரன் இ) தேற்றரவாளன் (ஈ) நீதிபரன்

17. சீஷன் இவன், சீமோனின் பையன்! நீசன் இவன் நிதி-சுமந்த கள்ளன்! புருட்டஸ், எட்டப்பன்! சூய்சைடில் செத்தவன்! **இவன் யார்?**

18. கொலைமரத்து தலைவாசகம்! நடுச்சிலுவை நல்வாசகம்! மும்மொழியில் முக்ய வாசகம்! திருமகனின் பெயர்-வாசகம்! **அது என்ன**?

19. தாகம் தீர்ப்பதல்ல இது, தாகத்தை ஒழிப்பது! பள்ளத்தின் ஊறுவதல்ல இது உள்ளத்தின் ஊற்று! பயிர் வளர்ப்பதல்ல, இது உயிரளிக்கும் நீர்! **இது என்ன?**

20. குளம் நல்ல குளம், குணமளித்த குளம்! குருடர், முடவர், குறையுடையோர் கூடியிருந்த குளம்! கலங்கித் தெளியும் குளம், கர்த்தர் சென்ற குளம்! **இது என்ன?**

பதிலளிக்க கடைசி நாள்: 25-01-2024 படைப்பாசிரியர்: அருட்திரு.எஸ்ஜேடி. தர்மராஜா

பதில் அனுப்பவேண்டிய முகவரி: திருமதி. ஜெயசீலி தர்மராஜா, எஃப்–1, முதல் மாடி, பாரதி பிளாட்ஸ், எண்: 4/2-A பாரதி தெரு, காந்தி நகர், சாலிகிராமம், சென்னை–93. வாட்ஸ்–அப்: 9789914463

# கர்த்தருடைய நாமங்களின் மகத்துவங்கள்

EPISODE-56

பாகம்-56


SIS.C. ANGEL

தேவன் தமது குமாரனாகிய இயேசுவை சர்வத்துக்கும் சுதந்தரவாளியாக நியமித்தார். எபி–1:2

God hath appointed His son, heir of all things. Heb 1:2

## Heir of all thing - Klironomos olon ton pragmaton

## சர்வத்துக்கும் சுதந்தரவாளி

**கிளிரோநோமோஸ் ஒலோன் தோன் பிராக்மேதோன்**

பிதாவனவரின் மகிமையின் பிரகாசமும், தன்மையின் சொரூபமுமாய் இருந்து, சர்வத்தையும் தமது வல்லமையுள்ள வசனத்தினாலே தாங்குகிற இயேசுவின் நாமத்தில் இரட்சிப்பின் விசுவாசிகளுக்கு புத்தாண்டின் விசேஷ நல்வாழ்த்துக்கள்.

**யோபு-31:2** சர்வ வல்லவர் உன்னதத்திலிருந்து நமக்கு சுதந்தரம கொடுக்கிறார்.

**எரே-10:16ந** சர்வத்தையும் உருவாக்கினவரின் சுதந்தர கோத்திரம் நமக்குக் கொடுக்கிறார்; ஏன்? எதற்கு?. கடந்த காலங்களில் ஆசீர்வாதங்களை சுதந்தரிக்க முடியாத தடை, தலைதூக்க முடியாத சூழ்நிலைகள் மற்றும் நோயுற்ற நிலை. போன்ற பாதையிலும் தேவனுக்கு நம்மால் இயன்ற ஊழியத்தைச் செய்துவந்ததை அவரது கண்கள் கண்டதால். 2024ல் அவரது கரங்கள் கிரியை செய்யப்போகிறது.

**கலா-4:6,7** அப்பா! பிதாவே என்று அழைக்கிற சுதந்தரம்.

**கலா-3:29** (உபா-32:9) ஆபிரகாமின் ஆசீர்வாதங்களை நமக்குத் தந்து, நாம் அவருடைய சுதந்தரவீதம் என்பதை வெளியரங்கமாக்குகிறார்.

**சங்-135:11,12** தேசத்தின் எழுப்புதலுக்காக ஜெபித்துவரும் நமக்கு தேசத்திலிருந்து எமோரியன், சீகோன், பாசான், ஓக் மற்றும் கானானியரின் சகல ராஜ்யங்களையும் அழித்து தேசத்தை நமக்குச் சுதந்தரம் ஆக்குகிறார்.

**உபா-32:9-14** கழுகைப்போல் நம் கூட்டைக் காத்தவர் நம்மை உயர, உயர பறக்கச் செய்யப்போகிறார். பூமியின் உயர்ந்த ஸ்தானங்களில் ஏறிவரப்பண்ணி விளைச்சலின் பலன், கன்மலைத் தேன், கற்பாறையின் எண்ணெய் உண்ணும்படி செய்கிறார். பசுவின் வெண்ணெய், ஆட்டின் பால், பாசான் தேச ஆட்டுக்குட்டியின் கொழுப்பு ஆகியவற்றின் திருவிருந்தினால் நம்மைப் போஷித்து அவர் ஒருவரே நம்மை வழிநடத்திவந்தார் என்பதை வெளியரங்கமாக்குகிறார். அல்லேலூயா.

**ஜெபம்:** தமது குமாரனின் ஆவியை எங்கள் இருதயங்களில் அனுப்பி நீ என் புத்திரன், புத்திரி என்று கிறிஸ்துவின் வழியாய் சுதந்தரத்தைத் தந்த அப்பா பிதாவே! உமக்கு ஸ்தோத்திரம். நீர் சொன்ன ஆசீர்வாதங்களை சுதந்தரிக்க உமது கரத்துக்குள் எங்களை அர்ப்பணித்து ஜெபிக்கிறோம். இயேசுவின் நாமத்தினால். ஆமென் பிதாவே.

கிறிஸ்துவுக்குள் உங்கள் அன்பு சகோதரி
C. Angel

தொகுப்பு: சகோ.C. ஏஞ்சல் B.Sc திருநெல்வேலி, தென்னிந்தியா

தேன்-துளி வேத வசனக் கதை-152

# பழைய மனிதனைக் களைந்துபோட்டு புதிய மனிதர்களாவோம்

சகோ. M. அசரியா ஞானதாஸ் M.A., M.ED.

ஜெர்மனியின் புகழ்பெற்ற ஓவியர் ஒருவர், இயேசுவை 12வயது சிறுவனாக ஓவியம் வரைந்து அருங்காட்சியகத்தில் வைக்க விரும்பினார். இதற்காக அவர் பல பள்ளிக் கூடங்களுக்குச் சென்று இயேசுவைப்போல் முக-அமைப்பு கொண்ட மாணவனை தேடினார். இறுதியாக 'பால்பர்' என்ற அழகும் அமைதியும் உள்ள 12வயது மாணவனை இயேசுவின் சாயலுக்கு பொருத்தமாகக் கண்டு, அவனுக்கு இயேசுவின் குணாதிசயங்களை போதித்தபின், அவனை வைத்து 12வயது இயேசுவை படமாக வரைந்து உலக அளவில் பாராட்டுகளைப் பெற்றார். நாட்கள் நகர்ந்தன, மாணவன் 'பால்பர்' நன்கு படித்து பட்டம் பெற்று வேலையில் அமர்ந்தான். பின்னர் அவன் தீய நண்பர்களுடன் சேர்ந்து குடி, வெறி, வேசித்தனம் போன்ற வாலிப வயதின் பாவங்களின் சிக்கி தவித்தான்.

பல வருடங்கள் கழித்து அதே ஓவியர், இயேசுவை காட்டிக்கொடுத்த யூதாஸ்காரியோத்தை ஓவியமாக வரைந்து மியூசியத்தில் வைக்க விரும்பினார். யூதாசின் சாயலுக்குப் பொருத்தமான ஒரு வாலிபன் கிடைக்காததால் தெருத் தெருவாக தேடி அலைந்தார். இறுதியில், பின்மாற்றம் அடைந்து கொடூரமான முகத்துடன் காணப்பட்ட ஒரு வாலிபனைக் கண்டு அவனை தேர்ந்தெடுத்து யூதா ஸ்காரியோத்தாக வரைய ஆரம்பித்தார். திடீரென ஏதோ ஒன்று அவரது மூளையில் உறுத்த, அவர் அந்த வாலிபனை நோக்கி, ''உன்னை எங்கேயோ பார்த்த நினைவு இருக்கிறது, நீ யார்?'' எனக் கேட்டார். அதற்கு அந்த வாலிபன், ''ஐயா! 12வயது இயேசுவை நீங்கள் வரைவதற்கு மாடலாக இருந்த பால்பர் நான்தான்.'' என்றான். ஓவியரின் உள்ளம் உடைந்தது. ஓவியத்தை வரைந்து முடித்தவுடன் அவர் பால்பரை நோக்கி, ''பால்பர்! நீ 12வயதில் இயேசுவின் பிள்ளையாக இருந்தாய் எனவே நான் உன்னை இயேசுவாக வரைந்தேன். இப்போது நீ பின்மாற்றம் அடைந்தவனாகிவிட்டாய், உன் நிலைக்காக வருந்துகிறேன்'' எனக் கூறி வேதம் வாசித்து தியானிக்க அவனுக்கு ஆலாசனை வழங்கினார். சில காலம் கழித்து அவர் பால்பரை சந்தித்தபோது அவனை விசுவாசியாகக் கண்டு மகிழ்ந்து, தேவனுக்கு நன்றி செலுத்தினார்.

பிரியமானவர்களே! நாம், நம் வாழ்நாள் முழுவதிலும் இயேசுவுக்கு சாட்சியாக வாழ வேண்டும். பால்பர் தன் இளம் வயதில் சாட்சியின் வாழ்வு வாழ்ந்தான், வாலிப வயதில் அவன் மாமிச இச்சையில் வாழ்ந்தான். பின்னர், அவன் மனம் மாறி விசுவாசத் துக்கு திரும்பினான். நாம் இதைப்போல் அல்லாது, எக்காலத்திலும் இயேசுவின் பிள்ளைகளாக வாழும்படிக்கு இந்த புத்தாண்டில் அவலட்சணமான பழைய வாழ்க்கையை களைந்துபோட்டு இயேசுவின் பிள்ளைகளாய், பரிசுத்த வாழ்வு வாழ தீர்மானம் எடுப்போம். வேதம் இவ்விதம் சொல்லுகிறது:

கர்த்தரை நான் எக்காலத்திலும் ஸ்தோத்திரிப்பேன் அவர் துதி எப்போதும் என் வாயிலிருக்கும். சங்கீதம் 34:1.

மோசம்போக்கும் இச்சைகளாலே கெட்டுப்போகிற பழைய மனுஷனை நீங்கள் களைந்துபோடுங்கள். எபேசியர் 4:22

தேவனுடைய சாயலுக்கொப்பான புதிதாக்கப்பட்ட புதிய மனுஷனைத் தரித்துக்கொண்டிருக்கிறீர்கள். கொலோ 3:10


சகோ. அசரியா

Bro. M. Azariah Gnanadoss M.A., M.Ed.
Editor, 'Ratchippu' Tamil Christian Monthly Magazine, Chennai-93. Mobile: 9962924900




EPISODE 18

# இரண்டாயிரம் ஆண்டு வரலாறு.. இரண்டாம் வருகைக்குத் தயாராகு...

கட்டுரை ஆசிரியர்
அறிவர். திருமதி. சலோமி மனோகர்




இந்திய திருச்சபை சரிதை:
(1முதல் 21ம் நூற்றாண்டுவரை)
தொகுதி-4 பகுதி-3

**4. கிறிஸ்தவப்பணியின் ஆரம்பம்**

**3. இந்தியர்களின் பற்றுறுதி மாற்றம் - நல்முயற்சி**

பிரான்சிஸ்கன் பிரையர் ஆண்டனி டி லூரோ, இரண்டாவது முறையாக 1517ல் இந்தியா வந்தார். இந்தியர்களின் மனமாற்றத்திற்காக கிறிஸ்தவர் அல்லாத வர்களிடையே சுவிசேஷப்பணி செய்வதில் முன்னோடியாக இவர் இருந்தார். அவரது முதல் முயற்சிகளில் சிரமங்கள் இல்லாமல் இல்லை. உதவியாளர் கிடைப்பது கடினமான காரியமாயிருந்தது. ஆனாலும், கோவாவில் கான்வென்ட் கட்ட விரிவான அங்கீகாரம் மற்றும் இடம் தேர்வு செய்யும் உரிமை அரசரால் ஆண்டனி டி லூரோவுக்கு வழங்கப்பட்டது

ஆனால் கோவா கவர்னர், கோவா நகரம் மிகவும் சிறிய நிலப்பகுதி மட்டுமின்றி விண் வெளியிலும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. தேவாலயங்கள் கட்டப்பட ஏற்கனவே இடம் வழங்கப்பட்டுள்ள நிலையில் நகரத்திற்கு சிறிது தூரத்தில் இடத்தை தேர்வு செய்து கொண்டால் நலம் என்று தெரிவித்தார்.

திருத்தந்தை ஆண்டனி டி லூரோ, நகரத்திற்கு சிறிது தூரத்தில் ஒரு பெரிய தோட்டம் பிரான்சிஸ்கன்கள் வசம் இருப்பதை அறிந்தார். எனினும் கான்வென்ட் கட்ட மட்டுமின்றி திருச்சபை சடங்குகள் (திருமுழுக்கு - ஒப்புரவு - நற்கருணை - நோயில் எண்ணெய்பூசுதல் - திருமணம் - குருத்துவம்) செய்யவும் போப்பிடமிருந்து ஒரு சிறப்புச் அதிகாரத்தையும் அவர் பெற்றிருந்ததால், பிரான்சிஸ்கன்களின் தோட்டம் இருக்குமிடம் தனக்கு, கிறிஸ்துவர் அல்லாதவர்களுடன் தொடர்பு கொள்ளுதல் மற்றும் திருச்சபை நிர்வாகம் ஆகிய முக்கிய வேலைகளுக்கு வசதியான தளமாக இருக்காது என எண்ணி மனம் வருந்தினார்.

இறுதியில் கவர்னர் மனம் மாறி, நகரத்திற்குள் கான்வென்ட் கட்ட ஒப்புக்கொண்ட

காரணத்தினால் திருத்தந்தை ஆண்டனி, பிரான்சிஸ்கன்கள் உதவியுடன் நகரத் தில் உள்ள வீடுகள் பலவற்றைப் பெற முடிந்தது. கான்வென்ட் கட்டப்படவிருந்த இடத்தை உறுதிப்படுத்திய திருத்தந்தை ஆண்டனி, அதன்பின் கான்வென்ட் அமைக்கப்பட்ட இடத்தில் இருந்துகொண்டு செயல்பட்டார். ஒரு வருடத்திற்குள் பிரான்சிஸ்கன்களின் இடைவிடாத ஆர்வமுள்ள சுவிசேஷ பிரகடனத்தின் மூலம் 800 கிறிஸ்தவர் அல்லாதவர்கள் கிறிஸ்தவ பற்றுறுதியை ஏற்றுக்கொண்டதாக வரலாற்றுக் குறிப்புகள் கூறுகின்றன.

மதச்சார்பற்ற குருமார்களுடனான உறவுகள் திருத்தந்தை ஆண்டனி டி லூரோ வுக்கு ஒருபோதும் எளிதாக இருந்ததில்லை. கற்பித்தல் முறையை அறிவுறுத்தவும் ஆலோசனை வழங்கவும் கான்வென்ட் உள்ளே ஆண்களும் பெண்களும் ஒன்று கூடிப் பேசுவது அவசியமாயிற்று. இதை மதச்சார்பற்ற குருமார்கள் விரும்ப வில்லை. மதச்சார்பற்ற குருமார்கள் ஒத்துழைத்திருந்தால் மேலும் அநேகர் கிறிஸ்தவ பற்றுறுதிக்கு மாறியிருப்பார்கள். ஆனால் மதச்சார்பற்ற குருமார்கள ஒருபோதும் தங்கள் சம்மதத்தை கொடுத்ததில்லை. மதச்சார்பற்ற குருமார் கள், மதகுருமார்களின் பல கோரிக்கைகளுக்குத் தடை விதித்தபோதிலும் அங்கு இருந்த பெரும் எண்ணிக்கையிலான மாற்றுத்திறனாளிகளுக்கு மதகுருமார் கள் உதவ வேண்டும் என்பதை மட்டும் ஒப்புக்கொண்டார்கள். இது மதச்சார்பற்ற ஒரு முன்மொழிவாக இருந்தது

கொச்சியைப் போன்று கோவாவிலும் பெருமளவில் கிறிஸ்தவம் வளரவேண்டு மானால், இந்திய கிறிஸ்தவர்கள் அதிகமான எண்ணிக்கையில் சுவிசேஷம் அறிவிப்பது அவசியம் என்று பிரான்சிஸ்கன்கள் நினைத்தார்கள். மற்ற நாட்ட வரைப்போலன்றி போர்சுகீசியர்களுக்கு இந்திய சூழ்நிலைகள் வசதியானதாகவே இருந்தபோதிலும், பெரும் எண்ணிக்கையிலான போர்சுகீசியர்களை இந்தியாவில் வைத்திருப்பதில் சிக்கல் எப்போதும் இருந்தது. சில துறவிகள், விகாரர்களைப் போலவே, மூன்று வருட காலத்திற்கு மட்டுமே அனுப்பப்பட்டனர்.

1532ம் ஆண்டு நவம்பர் 8ம் தேதி எழுதப்பட்ட ஒரு கடிதத்தில், 14ஆண்டுகளில் கோவா கான்வென்ட் மையத்தில் மாத்திரம் 20துறவிகள் இறந்தனர் என அறிய முடிகிறது. 1531ல் போர்ச்சுகலில் உள்ள உயர் அதிகாரிகள், புதிய துறவிகளை இந்தியாவுக்கு அனுப்பமுடியாது என தகவல் அனுப்பினார்கள். உண்மையில், 1532ம் ஆண்டில் ஒரு துறவிகூட இந்தியா வரவில்லை. மேலும், முழு உத்வேகத் துடனும், தொடர்ச்சியுடனும் வேலை செய்யக்கூடியவர்களை வெளிநாட்டவர்கள் வழங்கவில்லை. இச்செயலை கான்வென்ட்டின் பாதுகாப்பாளரான திருத்தந்தை ரோட்ரிகோ டா செர்பா எதிர்த்தார். போர்ச்சுகலின் உயர் அதிகாரிகளும் அவருடன் உடன்பட்டு சுதேச ஆட்சேர்ப்புக்கு ஆதரவளித்தனர். முடிவில், ஒரு சில இந்தியப் பழங்குடி மதகுருமார்களுக்கு பயிற்சியளித்து கிறிஸ்தவ நற்செய்திப் பணிகளை ஊக்குவிக்கும் யோசனையை திருச்சபைப் பொறுப்பிலிருந்த மைக்கேல்

வாஸ் விகார் மற்றும் மதச்சார்பற்ற பாதிரியார் குச டியோகோ போர்பா ஆகியோர் பிஷப், தலைமை நீதிபதி, ஆளுநர், கருவூலச் செயலர் ஆகியோருக்குத் தெரிவித்தனர். மண்ணின் மைந்தர்களாய் சுவிசேஷப்பணி செய்துவந்தவர்களுக்கு இந்த யோசனை மகிழ்ச்சி அளித்தது.

இந்திய கிறிஸ்தவ திருச்சபை வரலாறு தொடரும்...

Author: Dr. Mrs. Salomi Manohar, Asst. Professor Rtd., (Pope's College, Sawyerpuram)
Thiruvanmiyur, Chennai. South India

## Good Tidings Bible-Prints Ministries

**Good Seeds - Gospel Tracts**
**நல்ல விதைகள் - கைபிரதிகள்**

**நற்செய்தி வேதாகம அச்சுப்பதிவு ஊழியங்கள்**

சுவிசேஷ ஊழிய பயன்பாட்டுக்காக 20-வகையான கைப்பிரதிகளை வெளியிட்டு அவற்றை கைப்பிரதி ஊழியர்களுக்கும் திருச்சபைகளுக்கும் இலவசமாய் வழங்கி வருகிறோம். ஒரு வகை கைப்பிரதியை வெளியிட ஆகும் செலவு ரூ.3500/- மட்டும். கைப்பிரதி களை Sponsor செய்து இயேசுவின் அன்பை அநேகர் அறிந்திட உதவிடுங்கள். Sponsor செய்யவிரும்புவோர் நமது ஊழிய இயக்குநரை தொடர்பு கொள்ளவும்.

| No.&Title of the Tract | Sponsor's Name |
|---|---|
| 1. மைனாவின் கதை - The story of Myna | - Rev. S.J.D. Dharmaraj, Che-93 |
| 2. வக்கீல் நீதிபதியானார் - Counsel became Judge | - Mr.T. David Manohar, Che-93 |
| 3. மாட்டு உண்ணி - The Cattle Tick | - Mr.R.G. Sutharsingh, Che-93 |
| 4. கர்வமான காகிதப்பட்டம் - The Envious Kite | - Mrs. Rani Samuelraj, Che-93 |
| 5. டிரைவர் இல்லாத ரயில் - A Train without Driver | - Mr. Prasad Samuel, Cud-6 |
| 6. சீரழிக்கும் சீமைக்கருவை - Acacia of fence | - Mr.P.H. Jaychandran, Che-93 |
| 7. குடிநீர் குழாயில் குண்டுத்தவளை - Frog in tap | - Mr.R.C.P. Nixon, Che-93 |
| 8. இளவரசனும் கைதியும் - Prince and the Convict | - Mr.J. Albert, Kumbakonam |
| 9. கடலில் கல்லறைத் தோட்டம் - Bermuda Triangle | - Mr.C. James, Sirkali |
| 10. பற்றியெரியும் மனிதர்கள் - Human Combustion | - Mr.S. Nixon Everbright, AP |
| 11. டைட்டானிக் கப்பல் - The Titanic Ship | - Dr. Sharmila Selvaraj, Cud-1 |
| 12. நாக்குப்பூச்சி - The Tape Worm | - Mr. Arthur Masilamani, Che-7 |
| 13. அதிசய சொட்டு மருந்து - Miracle Drops | - Rev. S.J.D. Dharmaraj, Ch-93 |
| 14. எரியும் முன் எச்சரிக்கை - Warning before death | -Mr.A. Santharaj, Kumbakonam |
| 15. பிணக்குவியலில் இருந்து - From pile of Corpses | - Mr. S.J.P. Raja, Che-126 |
| 16. வெந்நீரில் தவளை - The Frog Experiment | - Mrs. Stella David, Tuticorine |
| 17. கன்கார்டு விமானம் - The Concord Aircraft | - Mr.B. Wilson, Che-92 |
| 18. ஜீன் வால் ஜீன் - Jean Valjean | - Mr. Samson Abraham, Che-93 |
| 19. பெர்லின் சுவர் - The Berlin Wall | - Mr.A. Inbaraj, Kumbakonam |
| 20. மரணத்தின் சாலை - El Camino de la Muerte | - Mr. Frankline Christus, Ch-93 |

# ஜெப-ஜன்னல் ஜப-குறிப்புகள்

கர்த்தரை நோக்கி மன்றாடுவோம் - Come! Let us all intercede to God

1) அகில உலக சமாதானத்துக்காக... இஸ்ரேல்-ஹாமாஸ் போர் மற்றும் உக்ரைன்-ரஷ்யா போர் முடிவுக்கு வர... இலங்கை, பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான் வங்கதேச பொருளாதாரம் சீரடைய... பெருமழை-வெள்ளம், நிலச்சரிவு, காட்டுத்தீ, பூமியதிர்ச்சி ஆகிய பேரிடர்களின் சேதங்களிலிருந்து மக்கள் பாதுகாக்கப்பட...

2) இந்திய மக்களின் நல்வாழ்வுக்காக... இந்தியாவில் மதவாதம், வன்முறை வாதம், பிரிவினைவாதத்தை ஊக்குவிக்கும் அரசியல் தலைவர்கள் மற்றும் ஆட்சியாளர்களின் முயற்சிகள் முறியடிக்கப்பட.... பழங்குடி மற்றும் சிறுபான்மை மக்களுக்கு எதிரான ஒடுக்குதல்கள் நிறுத்தப்பட... பொருளாதாரம்-விலைவாசி சீரடைய... இந்தியாவில் 2024ம் ஆண்டின் முதற்பகுதியில் நடைபெறவிருக்கும் பாராளுமன்றத் தேர்தல்கள் நேர்மையான முறையில் நடைபெற... நீதிமன்றங்களில் நீதியரசர்கள் பாரபட்சமின்றி நீதி வழங்க...

3) தமிழ்நாட்டு மக்களின் நல்வாழ்வுக்காக... தமிழ்நாட்டின் வடக்கு மற்றும் தெற்கு மாவட்ட மக்கள் புயல்-மழை-வெள்ள பாதிப்புகளிலிருந்து சகஜ நிலைக்குத் திரும்ப, அவர்களுடைய இழப்புகளில் தேவைகள் சந்திக்கப்பட... தமிழ்நாட்டு மக்கள் இன - மத - மொழி வேறுபாடின்றி அமைதியாக வாழ... தமிழ்நாட்டில் விவசாயம், தொழில்கள், வியாபாரம் சிறக்க... தமிழ்நாட்டில் அரசியல் குழப்பங்கள் முடிவுக்கு வர... தமிழ்நாட்டில் மத-வாத, வன்முறைவாத, பிரிவினைவாத சக்திகள் கட்டுப்படுத்தப்பட...

4) திருமதி. மெர்லின், திருமதி. பாக்கியா, திருமதி. திலகவதி மகேஷ், திருமதி. வைலட், திருமதி. சுதா, திருமதி. பிரியா சுதிர், திருமதி. புஷ்பாவதி, திருமதி. ஹனா விஜய் ஆகியோருக்கு குழந்தை பாக்கியம் கிடைக்க...

5) உயர்-கல்வி பயிலும் நம் பிள்ளைகள் சிப்ரா, ஜாஸ்மின், ஜாஷ்வா மேத்யூ, வில்சன், DR. கிறிஸ்டினா, கி∴ப்ட்சன் தங்கராஜ், பிரின்ஸ் ஜேக்கப், ஜெனிபர், சிந்தியா பிரகாஷ், ஜோ∴ப்னா ஆகியோருக்கு சிறந்த ஞானம் வழங்கப்பட...

6) திரு. நெல்சன் (நகோமி), திரு. வெஸ்லி சாமுவேல், REV. கருணாகரன், திருமதி.தீபா, திரு. ஆபிரகாம் மனோகர், திரு. டெம்பிள் வில்லியம், திரு. செல்வராஜ், திருமதி. சாந்தி அலெக்ஸ், திருமதி. அன்னாள் ஜெபக்கனி, திருமதி. பங்கஜம் வில்சன், திரு. அப்பன் டேவிட், திருமதி. ∴பிளாரன்ஸ் ராஜமணி ஆகியோரின் சரீர சுகத்திற்காக...

7) திருமதி. சுந்தரி பாய், திருமதி. ஞானம் ராஜசேகர், திருமதி. செல்வி பாண்டியன், திரு. ரிச்சர்டு, திருமதி. ராஜேஷ் வரி, DR.ஷீபா, திருமதி. ஜலீன் செல்லத்துரை, திருமதி. ரத்னாபாய் சாம், திருமதி. மேரி கிரேஸ், திருமதி. மகிமா சந்திரன், திருமதி. வசந்தா அன்பன், திருமதி. சுகிர்தா சின்னதுரை ஆகியோரின் குடும்ப ஆசீர்வாதங்களுக்காக...

8) நமது ஊழிய ஆதரவாளர்களான திரு.ஜி.என்.எஸ். டேவிட், திரு.ஜே.ஆர். டேவிட், திருமதி. ரமோலா அதிசயராஜ், செல்வி. ஷைனி, திருமதி. அரோமா சாத்ராக், திரு. சாம்சன் ஆபிரகாம், திரு. எஸ்.ஜே.பி. ராஜா, திரு. அசரியா ஞானதாஸ், திருமதி. நிறைமதி ஜாண்ஸன் திருமதி. வனஜா ஹெர்பர்ட் ஆகியோருக்காக.. அவர்களது குடும்பங்களுக்காக...

9) திருமதி. சேர்டியஸ் தாவீது அவர்கள் சுக-பிரசவத்தில் அருமையான குழந்தை பெற்றெடுக்க...

Ratchippu Tamil Monthly. Registered News Paper.
Date of Publication: First week of every month
RNI Regn. No.: TNTAM/2012/48197. Postal Regn. (RNP) No.: TN/CC (S) DN/468/22-24.
Licensed to post without prepayment under WPP No.: TN/PMG(CCR)WPP-583/22-24.
Due date for Posting: 8th, 9th & 10th of every month. Posted on: 10th January 2023.
Posted at: RMS Patrika Channel Window, Egmore, Chennai-600 008.



# செய்தித்துளிகள்

1. ஈரானில் சுற்றுலா துறையை மேம்படுத்தும் நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக, இந்தியா உள்ளிட்ட 33 நாடுகளை சேர்ந்த சுற்றுலா பயணிகள் ஈரான் வருவதற்கு இனி விசா தேவையில்லை என ஈரான் அரசு அறிவித்தது.

2. இம்மாதம் 26ம் தேதி புதுடெல்லியில் நடைபெறும் இந்தியாவின் 75வது குடியரசு தினவிழாவில் சிறப்பு விருந்தினராக பிரான்ஸ் நாட்டின் அதிபர் இம்மானுவேல் மேக்ரான் பங்கேற்பதாக ஒன்றிய அரசு அறிவிப்பு.

3. தமிழ்நாடு அரசுப்பணி தேர்வாணையம் குரூப்-2 மற்றும் 2ஏ பணியிடங்களுக்கான தேர்வு முடிவுகள் வெளியாகவுள்ள நிலையில் அதற்கான காலிப்பணியிடங்களின் எண்ணிக்கை 5413லிருந்து 5860ஆக உயர்த்தப்பட்டுள்ளது

4. கோக-கோலா நிறுவனம் ரூ.3,000கோடி முதலீட்டில் குஜராத்தில் தனது 3வது குளிர்பான ஆலையை சனந்த் நகரில் 1.6லட்சம் ச.மீ பரப்பளவில் அமைக்கிறது. இதில் சுமார் 1,400பேர் வேலைவாய்ப்பு பெறுவார்கள் என தகவல்.

5. 16 நாடுகள் பங்குபெறும் யு-19 உலகக்கோப்பை கிரிக்கெட் தென் ஆப்பிரிக்காவில் இம்மாதம் 19ம் தேதிமுதல் பிப்-11ம் தேதிவரை நடைபெறுகிறது. இதற்கான 41போட்டிகள் கொண்ட புதிய அட்டவணையை ஐசிசி வெளியிட்டது.

Posted on: 10th January 2024

To

# புத்தாண்டு – 2024

**இரட்சிப்பு** பத்திரிக்கையின் **நல்வாழ்த்துக்கள்**
வாசகர்கள், ஆதரவாளர்கள், படைப்பாளர்கள், கைப்பிரதி களப்பணியாளர்கள், திருச்சபைப் போதகர்கள், இறைமக்கள், இரட்சிப்பு-விசுவாச-குடும்பத்தார் அச்சகத்தார் மற்றும் தபால்-துறை நண்பர்கள் ஆகிய அனைவருக்கும் எங்கள் இதயங்கனிந்த புத்தாண்டு-2024 நல்வாழ்த்துக்கள்.

**இரட்சிப்பு**
ஊழிய-குடும்பத்தார்




If undelivered Please return to:
**REV.S.J.D. DHARMARAJA**
MISSION DIRECTOR
RATCHIPPU TAMIL MONTHLY,
NO: 4/2-A, BHARATHI STREET,
GANDHI NAGAR, SALIGRAMAM,
CHENNAI-93, TAMILNADU, SOUTH INDIA.

Owned & Published by: S.J.D.Dharmaraja. Published from No:6-A, Ambedkar St., Gandhinagar, Saligramam, Chennai-93. Printed by: S.Isaac Prince at Sams Graphics, No: 1, 12th Avenue, Ashok Nagar, Chennai - 600 083. Editor: M. Azariah Gnanadoss.